# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1937 - 2015 ඔක්තෝබර් මස 16 වැනි සිකුරාදා - 2015.10.16

*1937 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
| --- | --- |
| பதவிகள் - வெற்றிடம் | 1570 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1576 |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*
### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, நவெம்பர் மாதம் 6 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, கார்த்திகை மாதம் 16 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, புரட்டாதி 23.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | கொம்பனித்தெரு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 5 |

10-716

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

அரச கரும மொழிகள் திணைக்களம்

**அரச கரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015**

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | - | பதவிகளின் எண்ணிக்கை | 1 |
| மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) | - | பதவிகளின் எண்ணிக்கை | 1 |
| மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/தமிழ்) | - | பதவிகளின் எண்ணிக்கை | 1 |

2. தெரிவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

3. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 20,030-365 x 11-500 x 18- ரூபா 33,045.

4. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

5. **தகைமைகள்**.- மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும் :-

5.1 ***கல்வித் தகைமைகள்***.- **மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிங்கள மொழியினை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மொழிபெயர்ப்பில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அத்துடன்

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தமிழ் மொழியினை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மொழிபெயர்ப்பில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அத்துடன்

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/தமிழ்)** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தமிழ் மொழியினை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மொழிபெயர்ப்பில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அத்துடன்

***தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு***.- க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்கள மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் சிங்கள மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

***சிங்கள மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு***.- க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் தமிழ் மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

5.2 ***அனுபவம் :***

(i) விண்ணப்பதாரர் இணைந்த சேவையின் வகுப்பு I அல்லது விசேட தரத்தில் உள்ள மொழிபெயர்ப்பாளராக 06 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) விண்ணப்பதாரர் அரச கரும மொழிகள் திணைக்களத்தில் உள்ள மொழிபெயர்ப்பாளராக 05 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) விண்ணப்பதாரி அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பு உதவியாளராக 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5.3 ***உடல் தகைமைகள்.*** - ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இந்தப் பதவியிலுள்ள கடமைகளினை ஆற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கையின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

5.4 ***ஏனையவை.*** - இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவைப்படும் அனைத்துத் தகைமைகளின் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட திகதி அன்று பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. ***ஆட்சேர்ப்பு முறை.*** - கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் :

| மதிப்பீட்டின் துறைகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| (1) மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| (2) பதவியுடன் தொடர்பில் அடையப்பெற்ற தொழில்சார் அனுபவம் | 35 |
| (3) பதவியுடன் தொடர்புற்ற துறையினுள் அடையப்பெற்ற மேலதிக அனுபவம் | 35 |
| (4) நேர்முகப் பரீட்சையில் மதிப்பிடப்பட்ட திறன் | 05 |
| மொத்தம் | 100 |

6.1 பதவி வெற்றிடங்கள், படிமுறையிலமைந்த நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திறமையின் அடிப்படையில் கூடுதலான புள்ளிகளினைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களிலிருந்து நிரப்பப்படும்.

1. மேலதிக கல்வித் தகைமைகள் (ஆகக்கூடிய புள்ளிகள் 25)

(i) குறித்த இரண்டு மொழிகளையும் பட்டத்தின் பாடங்களாகக் கொண்டிருத்தல். - 10 புள்ளிகள்

(ii) பட்டப்பின் படிப்பு தகைமையைப் பெற்றிருத்தல் :-

(அ) விண்ணப்பிக்கும் மொழிகளுக்குரிய ஆய்வுக்கட்டுரையுடன் குறைந்தது முதுமாணி தரத்திலான தகைமை - 15 புள்ளிகள் ;

அல்லது

(ஆ) விண்ணப்பிக்கும் மொழிகளுக்குரிய ஆய்வுக் கட்டுரையற்ற குறைந்தது முதுமாணி தரத்திலான தகைமை - 10 புள்ளிகள் ;

அல்லது

(இ) ஏனைய எந்தவொரு பட்டப்பின் படிப்பு தகைமை - 05 புள்ளிகள்

2. பதவிக்கேற்ப பெற்றுள்ள தொழிற் தகைமைகள் (ஆகக்கூடிய புள்ளிகள் 35)

(i) மொழிபெயர்ப்பு குறித்து குறைந்தது ஒரு வருட கால பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் - 20 புள்ளிகள் ;

அல்லது

மொழிபெயர்ப்பு குறித்து குறைந்தது ஒரு வருட கால டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் - 10 புள்ளிகள் ;

அல்லது

மொழிபெயர்ப்பு குறித்து வேறு பாடநெறியொன்றைக் கற்றிருத்தல் - 05 புள்ளிகள்

(ii) பட்டத்தின் ஒரு பாடமாகக் கற்றிராது, விண்ணப்பிக்கும் இரு மொழிகளில் ஒரு மொழியில் டிப்ளோமா தகைமையைக் கொண்டிருத்தல் - புள்ளிகள் 5 ;

(iii) விண்ணப்பிக்கும் இரு மொழிகளின் மொழிக் குடும்பத்தின் தேர்ச்சியை உறுதிப்படுத்தும் தகைமை (ஒரு மொழிக்கு 2 ரீதியில்) - ஆகக்கூடிய புள்ளிகள் 6

(iv) விண்ணப்பித்துள்ள இரு மொழிகளுக்கு அல்லது அவற்றின் மொழிக் குடும்பத்தில் உள்ளடங்காத மொழி அறிவு (ஒரு மொழிக்கு 2 ரீதியில்) - ஆகக்கூடிய புள்ளிகள் 4

3. பதவிக்கேற்ப பெற்றுள்ள மேலதிக அனுபவம் (ஆகக்கூடிய புள்ளிகள் 35)

(i) பதவிக்கேற்ப பெறவேண்டிய கட்டாய அனுபவத்திற்கு மேலதிகமாக அரசாங்க சேவையின் மொழிபெயர்ப்பு அனுபவம் மேலதிக ஒவ்வொரு வருடத்திற்காகவும் 1 புள்ளி என்ற ரீதியில் - ஆகக்கூடிய புள்ளிகள் 10

(ii) மொழிபெயர்ப்பு மேற்பார்வையாளராக பணியாற்றி இருத்தல் - ஆகக்கூடிய புள்ளிகள் 4

(iii) மொழிபெயர்ப்பு பயிலுனராகப் பணியாற்றியிருத்தல் - ஆகக்கூடிய புள்ளிகள் 3

(iv) நேர்முகப் பரீட்சை சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தினாலான மொழிபெயர்ப்பு அல்லது உதுப்பெயர்த்த நூலுக்கு 01 புள்ளி என்ற ரீதியில் - ஆகக்கூடிய புள்ளிகள் 3

(v) மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளராக பணியாற்ற தனது ஆற்றலை உறுதிப்படுத்தும் முன்வைப்பு - புள்ளிகள் 15

(மொழிபெயர்ப்பு சிக்கல்களைத் தீர்க்கும் முறை, மொழிபெயர்ப்பு பற்றிய கோட்பாட்டறிவு, மொழிபெயர்ப்புப் பிரவேசமும் ஆரம்பமும், உரைபெயர்ப்பு, கலைச் சொற்களைத் திரட்டுதல் மற்றும் சொற்றொகுதிகளைத் தொகுத்தல், பாரிய மொழிபெயர்ப்புக் கருத்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்பு, மொழிபெயர்ப்பு வகைகளுக்கேற்ப மொழிபெயர்ப்புக்களை நெறிப்படுத்தல் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு அறிவுரை வழங்குதல் என்பனவும் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்காக கணினி பாவனையுடன் தொடர்புடைய உயர்மட்ட ஆற்றல் (Ms Word, Excel முதலியவை) மற்றும் TRADOS, OMEGAT, WORDFAST போன்ற கணினியுடனான மொழிபெயர்ப்பு மென்பொருள் தொடர்பான அறிவும் அனுபவமும் கலந்துரையாடப்படும்.)

4. நேர்முகப் பரீட்சையின் போது வெளிக் காட்டிய திறமை (ஆகக்கூடிய புள்ளிகள் 05)

தலைமைத்துவ ஆளுமை, சமர்ப்பிக்கும் முறை ஆகிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும். - புள்ளிகள் 05

7. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்கையில் மிக அவதானத்துடன் சரியான தகவல்களையே வழங்குதல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் இந்த ஆட்சேர்ப்புப் பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகைமையற்றவர் என நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, நேர்முகப் பரீட்சையின் பொழுதோ அல்லது அதன் பின்னரோ அல்லது அதற்குப் பிறகு வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சைத் தன்மை இரத்துச்செய்யப்பட முடியும். விண்ணப்பதாரரினால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகவல் எந்தச் சந்தர்ப்பத்திலாவது தவறானது அல்லது பிழையானது எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாக நேரிடும்.

8. விண்ணப்பங்கள் ஏ4 அளவு (24 செ. மீ. x 29 செ. மீ.) தாளில் தயாரிக்கப்படல் வேண்டும்.

(அ) முதல் பக்கத்தில் 1 தொடக்கம் 3:4 வரையிலானவை இருத்தல் வேண்டும்.
(ஆ) இல. 4 தொடக்கம் மறுபக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.
(இ) விண்ணப்பங்களினைத் தயாரிக்கையில், சிங்கள மொழி மூலமான விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்படுகின்ற விண்ணப்பங்களின் தலைப்பினை சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்படுகின்ற விண்ணப்பங்களின் தலைப்பினை தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

8.1 விண்ணப்பங்களினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர் பதவி (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) - பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2015" எனக் குறிப்பிடல் வேண்டும்.

8.2 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கீழ்வரும் முகவரிக்கு 2015.11.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :

அரச கரும மொழிகள் ஆணையாளர்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, பாஷா மந்திரய,
கோட்டே வீதி,
இராஜகிரிய.

9. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவே தீர்மானிக்கும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட பொதுவான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

வீ. பி. பீ. கே. வீரசிங்ஹ,
தேசிய கலந்துரையாடல் அமைச்சு,
செயலாளர்.

தேசிய கலந்துரையாடல் அமைச்சு,
இல. 40, புத்கமுவ வீதி,
ராஜகிரிய,
2015, ஒற்றோபர் 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மொழி பெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்

Application for the Post of Superintendent of Translations (Sinhala/English), (Tamil/English) & (Tamil/Sinhala)

விண்ணப்பிக்கும் பதவி : [ ]

[ ] (அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(உரிய இலக்கத்தினைச் சுட்டிக்காட்டவும்)

1. மொழி பெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)
2. மொழி பெயர்ப்புக் கண்காணிப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)
3. மொழி பெயர்ப்புக் கண்காணிப்பாளர் (தமிழ்/சிங்களம்)

1. பெயர் :----.
   - 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   - 1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   - 1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   - 1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

2. முகவரி :
   - 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   - 2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   - 2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
   - 2.4 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   - 2.5 தொலைபேசி இலக்கம் :----.
   - 2.6 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
   - 2.7 வசிக்கும் காலப்பகுதி :----.
   - 2.8 கிராம அலுவலர் பிரிவு :----.

3.

3.1 பால் :
(பெண்-1, ஆண்-0)

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 குடியியல் நிலைமை :
விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

3.4 2015.10.16 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4. கல்வித் தகைமைகள் :

4.1 (அ) பட்டம் :
(ஆ) பட்டம் பெற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஆண்டு:
(இ) பட்டத்தின் பாடங்கள் :

4.2 க. பொ. த. (சாதாரண தரம்) :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.3 க. பொ. த. (உயர் தரம்) :

5. 5.1 சேவை/பதவி :----.
5.2 வகுப்பு :----.
5.3 2015.10.16 ஆந் திகதியன்று அரசாங்கத்தின்கீழ் மொத்த சேவைக்காலப் பகுதி (வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியில்)

ஆண்டுகள் :----. மாதங்கள் :----.

5.4 தற்போதைய வருடாந்த சம்பளம் :
ரூபா :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை என்று வெளிப்படுத்துகின்றேன். மேலும் ஆட்சேர்ப்புப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைவாக நான் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ தகைமையற்றவன் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் எனது பரீட்சைத் தன்மையினை இரத்துச்செய்யும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் :**
(தற்போது அரச சேவையில் உள்ளோருக்கு)

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................... அவர்கள் இந்த அலுவலகத்தில் ............................................... தொடக்கம் பணிபுரிகின்றார் என்றும் அவரின் வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்திகரமானவை என்றும் இந்த அலுவலகத்தில் பேணப்படும் பதிவேடுகளினை உபயோகித்து மேற்கூறப்பட்ட தகவல்கள் அனைத்தினையும் பரீட்சித்தேன் என்றும் அவை சரியானவை என்றும் அவர் என் முன்னிலையில் தன் கையொப்பத்தினை 2015 ......................................... ஆந் திகதி இட்டார் என்றும் நான் இத்தால் சான்றுபடுத்துகிறேன். தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி முத்திரை :----.
அலுவலக முத்திரை :----.
திகதி :----.

10-715

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தில் உதவிக் கம்பனிப் பதிவாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2015

கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தில் உதவி கம்பனி பதிவாளர் பதவிக்கான 2 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. **ஆட்சேர்ப்பு முறை.**– குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதுடன், எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பொருத்தமான விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்.

2. **தகைமைகள் :**

2.1 **கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள்/அனுபவம் :**

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட சட்டமாணி பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் ;

மற்றும்

(ii) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக விருத்தல் ;

(iii) உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

2.2 **உடற் தகைமைகள்.**– ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் மற்றும் இலங்கைக்கு வெளியில் எந்த ஒரு நாட்டிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 **வயதெல்லை.**– விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 21 வருடங்களுக்குக் குறையாதவராகவும் 35 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி வயது தொடர்பான தகைமைகள் நிறைவேறுவது விண்ணப்பதாரிகளின் பிறந்த திகதி 1994.11.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முந்தியதாகவும் 1980.11.16 ஆந் திகதி அல்லது அதற்குப் பிந்தியதாகவும் இருந்தால் மாத்திரமாகும்).

2.4 **ஏனையவை :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பிற்குரிய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **நியமனத்தின் ஒப்பந்தங்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது. விதவைகள் அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று வருட தகுதிகாண் கால எல்லைக்குட்பட்டது. நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்திற்கு உதவி கம்பனிப் பதிவாளர் பதவிக்கு நியமிக்கப் பட்டு மூன்று வருடத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கிணங்க மற்றும் அதனோடு இணைந்த சுற்றறிக்கைக்கு இணங்க சேவைக்கு இணைந்து 5 வருட காலத்தினுள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருப்பதுடன், அரச கரும மொழி அல்லாத மொழி மூலமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்கள் தகுதிகாண் கால எல்லைக்குள் அரச கரும மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொதுச் சட்ட விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப்பிரமாணம் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக்கு அமைய இந்நியமனம் மேற்கொள்ளப்படும்.

*4. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பளம், பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன்படி எஸ். எல். - 1 - 2006 இன்படி ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 ஆகும்.*

5. **எழுத்துப் பரீட்சை :**

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குப் பதிலாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

(ii) பரீட்சைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(iii) விண்ணப்பதாரி மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எனினும் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதானதாக எழுத்துப் பரீட்சை அமைந்திருக்கும் :

| பாட இல. | பாடம் | காலம் | புள்ளிகள் | சித்தி அடைவதற்கான புள்ளிகள் (ஆகக் குறைந்த) |
|---|---|---|---|---|
| 1 | ஆங்கில மொழி | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2 | பொது நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

எழுத்துப் பரீட்சைக்கான பாட விதானம் :

(1) ***ஆங்கில அறிவு :***

(i) *புரிந்துகொள்ளல்.-* 200 சொற்களுக்கு மேற்படாத தெரிவுசெய்யப்பட்ட பந்தியை வாசித்து புரிந்து பதிலளிக்கும் ஆளுமையைப் பரீட்சித்தல் ;

(ii) *இலக்கணம்.-* காலம், பெயர், ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத பேச்சு, பால் மற்றும் விகிதாசாரம் பற்றிய இலக்கண அறிவு பரீட்சிக்கப்படும் ;

இலக்கணம், வாக்கிய அமைப்பு மற்றும் தெளிவுபடுத்தல் தொடர்பில் பரீட்சார்த்தி பரீட்சிக்கப்படுவார். எல்லா கேள்விகளுக்கும் பதிலளித்தல் வேண்டும்.

(2) ***பொது நுண்ணறிவு**.-* இக்கேள்விப்பத்திரம் பரீட்சார்த்தியின் சிந்தனை ஆற்றல், தர்க்க அடிப்படையிலான திறமை, பகுப்பாய்வு செய்யும் திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் பொருட்டு இலக்கங்கள், படங்கள் மற்றும் சொற்களிலான 50 கேள்விகளைக் கொண்டிருப்பதுடன் அவற்றிற்கு பல்லின மற்றும் சுருக்கமான பதில்களை வழங்குதல் வேண்டும். அத்துடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

6. **நேர்முகப் பரீட்சை :**

(i) எழுத்துப் பரீட்சையில் அனைத்து வினாப்பத்திரங்களிலும் 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கிடையில் முன்னுரிமை அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற, வெற்றிடங்களுக்குச் சமனான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் ;

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவில் தெரிவுசெய்யப் படும் நேர்முக தேர்வுக்குழு ஒன்றின் மூலம் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் பரீட்சிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் எழுத்துப் பரீட்சை முடிவுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்படிவம் மாதிரிப்படிவத்தின்படி, ஏ4 அளவுத் தாளில் தயாரித்து அனுப்பப்படல் வேண்டும். ஏ4 தாளின் இரண்டு பக்கத்தையும் பாவிப்பதுடன், இலக்கம் 1 தொடக்கம் 5 வரை முதலாவது பக்கத்திலும் மிகுதி இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பதாரியின் கையெழுத்தில் விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். சிங்களத்திலும் தமிழிலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்களின் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை அந்த மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத மற்றும் பூரணப்படுத்தப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். தங்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது உகந்தது ;

(ii) விண்ணப்பதாரி தான் பரீட்சைக்குத் தோற்ற எண்ணும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்பத்திரத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும் ;

(iii) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு'' என்னும் முகவரிக்கு 2015, நவெம்பர் 16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கம்பனி பதிவாளர் திணைக்கள நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிக் கம்பனிப் பதிவாளர் பதவிக்கு தெரிவு செய்தல் (திறந்த)'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையின் அத்தியட்சகர், அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவை வர்த்தமானியில் வெளியிட்டு பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 2,75,220 ரூபாவிற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளத்தினைப் பெறும் நிரந்தர அரச சேவையைக் கொண்ட அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக பூரணப்படுத்தப்படாத சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். தபாலின்போது விண்ணப்பமொன்று காணாமல் போனதாக அல்லது தாமதமாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(vi) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் விண்ணப்பித்துள்ளதாகக் கொண்டு, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல், அவசியமெனின் திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தலுடன் சரியான முறையில் விண்ணப்பித்தவர்களுக்கு மட்டும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும்.

(vii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது பற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்தது ஐந்து தினங்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காதிருக்குமாயின் அறிவித்தலில் குறிப்பிட்டிருந்தவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவுக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், உங்கள் முழுப்பெயர், விலாசம், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டிய அதே சமயம் நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமொன்றிலுள்ள விண்ணப்பதாரியாயின், உங்களின் மேற்படி தகவல்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதமொன்றை தொலைநகல் மூலம் பரீட்சையின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவில் அனுப்புவதற்காக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, பரீட்சைத் திணைக்களத்திற்கு சமர்பித்தல் சிறந்தது. மேலும் உங்களின் தகவல்களை உறுதி செய்வதற்காக நீங்கள் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயன் உள்ளதாக அமையும்.

8. **பரீட்சைக்கான அனுமதி** :

(i) சரியான முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பப்பத்திரத்தினை அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்குமான பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும். பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை நிலையத்தின் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பாக இருப்பவரிடம் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையினை வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி பிறப்பிக்கும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடத்தல் வேண்டும். அத்தகைய சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்பட நேரிடும் ;

(ii) பரீட்சார்த்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே தனது பரீட்சை அனுமதி அட்டையினை பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளுக்குமான நடைமுறை செயற்பாட்டு முறை பற்றி இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறுவதால் மட்டும் பரீட்சார்த்தி வர்த்தமானியிலுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்தவராக கொள்ளப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணம்** :

(i) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். இப்பணத்தை விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் தீவிலுள்ள எந்த ஒரு அஞ்சல் நிலையத்திலோ அல்லது உப அஞ்சல் நிலையத்திலோ செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கட்டத்தில் கழன்றுவிடாது ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. உரிய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட பணத்தினை, பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போதல் அல்லது பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தகைமைகள் இல்லாமை போன்ற காரணங்களைக் கொண்டு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளப்பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரிக்கு உரித்தில்லை.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்ற வேண்டிய சகல பாடங்களும் தொடர்பாக பரீட்சைசெ நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எவரேனுமொரு விண்ணப்பதாரிக்கு தகைமை இல்லை என அறியவந்தால் அல்லது வழங்கப்பட்ட தகவல் தவறானதாக இருப்பின் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. சேவையில் சேர்த்துக்கொண்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவானதாகும். அதேபோல் வெற்றிடம் பூரணப்படுத்தப்படல் அல்லது பூரணப்படுத்தப்படாமை அல்லது வெற்றிடங்களில் பகுதியளவு பூரணப்படுத்தப்படல் போன்ற இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவரும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் படியே நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

----
செயலாளர்.

கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு,
காலி வீதி,
கொழும்பு 03,
2015, ஒற்றோபர் 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சில் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தில் உதவிக் கம்பனிகள் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்தலுக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

Recruitment to the Executive Category of Grade III (open) post of Assistant Registrar of Companies in the Ministry of Industry and Commerce - 2015

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

1. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 கடைசியாக வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னருமாக பெயரை ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதவும் :----.
(உதா :- GUNAWARDANDA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. 2.1 பால் :
ஆண் - 0
பெண் - 1

☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தினை எழுதவும்)

2.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

3. 3.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

3.2 நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) :----.

3.3 தொலைபேசி இலக்கம் :----.

4. 4.1 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4.2 2015.11.16 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5. 5.1 பிரசாவுரிமை :----.
(பரம்பரையினாலா அல்லது பதிவினாலா என்பது)

5.2 தேசிய இனம் :----.

6. 6.1 கல்வித் தகைமைகள் :

| பட்டத்தின் பெயரும் வருடமும் | பல்கலைக் கழகம்/ நிறுவனம் | பதிவு இலக்கம் | உள்வாரி/ வெளிவாரி | பாடங்கள் | சித்தி எய்திய வகுப்பு | செல்லுபடி யாகும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

6.2 தொழில் தகைமைகள் :

6.3 2015.11.16 ஆந் திகதியில் தொழில் அனுபவம் :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

7. விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரச சேவையில் தொழில் புரிந்து விலகியவரா அல்லது விலக்கப்பட்டவரா என்பது பற்றி :----.

8. 8.1 ஏதேனும் தவறொன்றிற்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீர்களா ? :----.

8.2 ஆம் எனில், விபரங்களைத் தருக :-----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரம் :----.
9.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
9.2 பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
9.3 செலுத்திய கட்டணம் :

[ பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டிவிடவும். ]

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவிப்பதுடன், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ................. இலக்க .................. ஆந் திகதிய பற்றுச்சீட்டு இத்துடன் ஒட்டப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களின்படி செயலாற்றவும், மேலும் பரீட்சைகள் தொடர்பான நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவர் என நிரூபிக்கப்பட்டால் அல்லது, நேர்முகப் பரீட்சைக்கு முன்னர், அதன்போது அல்லது அதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் சேர்த்துக்கொள்ள தகைமையற்றவனாவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சைகள் நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொண்டுவரப்படும் சட்டதிட்டங்களுக்கு உடன்படுவேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் (7) iv இன்படி) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதுடன், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தி, அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டு ........................ ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10. **திணைக்களத் தலைவரின் சிபாரிசு (அரச/மாகாண அரச/அரச கூட்டுத்தாபன சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கானது) :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி .................................... இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் .................................... ஆக சேவையில் ஈடுபடும் அதே சமயம், அவரது விண்ணப்பத்தை விதந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன். மேற்படி பதவிக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்நிறுவன சேவையிலிருந்து அவரை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

10-494